# AKILA PRESS RELEASE

# 2020-2021

தினமணி

செவ்வாய்க்கிழமை, 9 மார்ச் 2021

# இளம் வாக்காளர்களின் கையில் நாட்டின் எதிர்காலம்

## திருவண்ணாமலை ஆட்சியர் பேச்சு

வந்தவாசி, மார்ச் 8: இளம் வாக்காளர்களின் கையில் நாட்டின் எதிர்காலம் உள்ளது என்று திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான சந்திப் நந்தூரி கூறினார்.

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் திங்கள்கிழமை நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் மகளிர் தின விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற அவர் மேலும் பேசியதாவது:

உங்கள் வாக்கு நாட்டுக்கு நல்ல எதிர்காலத்தை தரவேண்டும். வாக்குக்காக பணம், பரிசு எதுவும் பெறாமல், வேட்பாளர்களின் தகுதிகளை ஆராய்ந்து 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும். உங்களைச் சுற்றி வசிப்பவர்களுக்கும் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.



மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்களிக்கும் முறை குறித்து மாணவிகளுக்கு விளக்கிய திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் சந்தீப் நந்தூரி.

பொருளாதார ரீதியாக மற்றவர்களை சாராமல், உங்களை நீங்களே சார்ந்திருக்க கல்வி மிகவும் அவசியமாகும். உயர் கல்வி பயின்று நல்ல வேலையை தேடிக் கொள்ளுங்கள். இப்போதெல்லாம் அரசுத் தேர்வுகளில் பெண்கள் அதிகளவில் பங்கேற்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

வாழ்க்கையில் உயர எதிர்காலம் குறித்து திட்டமிடல் அவசியம் ஆகும் என்றார்.

மேலும், 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி அமைக்கப்பட்டிருந்த பதாகையில் அவர் கையெழுத்திட்டார். அவரைத் தொடர்ந்து மாணவிகள் கையெழுத்திட்டனர்.

மேலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் எப்படி வாக்களிப்பது என்பது குறித்து மாணவிகளுக்கு அவர் விளக்கிக் கூறினார்.

விழாவுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். செயலர் எம்.ரமணன், இயக்குநர் பிரியா ரமணன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா வரவேற்றார்.

பயிற்சி துணை ஆட்சியர் அஜிதாபேகம், மகளிர் திட்ட இயக்குநர் சந்திரா, வந்தவாசி தொகுதி தேர்தல் அலுவலர் சி.சீதாலட்சுமி, வந்தவாசி வட்டாட்சியர் திருநாவுக்கரசு, அரிமா சங்க மாவட்ட முன்னாள் ஆளுநர் வி.எஸ்.தளபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மேலும், மாணவிகள் பங்கேற்ற 100 சதவீதம் வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வு நாடகம், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்து தமிழ் திசை

TIRUPATI
செவ்வாய், மார்ச் 9, 2021




▶▶ வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் நடந்த உலக மகளிர் தின விழாவில் பேசும் தி.மலை மாவட்ட ஆட்சியர் சந்தீப் நந்தூரி.

# அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் மகளிர் தின விழா

■ திருவண்ணாமலை

தி.மலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் முதல் தலைமுறை வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் உலக மகளிர் தின விழா நேற்று நடைபெற்றது.

கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். துணை முதல்வர் சுகுணா வரவேற்றார். ஆட்சியர் சந்திப் நந்தூரி சிறப்புரையாற்றினார். 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் விழிப்புணர்வு பலகையில் மாணவிகள் கையொப்பமிட்டனர்.

இதில் பங்கேற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதில், துணை ஆட்சியர் (பயிற்சி) அஜிதா பேகம், மகளிர் திட்ட இயக்குநர் சந்திரா, கல்லூரி செயலாளர் ரமணன் உட்பட பலர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியை இயற்பியல் துறை தலைவர் செல்வகுமார் தொகுத்து வழங்கினார்.

தினமணி
வியாழக்கிழமை, 11 மார்ச் 2021

# மாற்றத்துக்கான நோக்கத்தைக் கொண்டது தேசிய கல்விக் கொள்கை

**வேலூர், மார்ச் 10.** மாற்றத்துக்கான முழுமையான நோக்கத்தைக் கொண்டுள்ளது தேசிய கல்விக் கொள்கை 2020. இப்புதிய கல்வி முறையிலிருந்து வெளி வரக்கூடிய மாணவர்கள் அதிக தன்னம்பிக்கை, எதிர்காலத்தில் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் தகுதி உடையவர்களாக இருப்பர் என குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தெரிவித்தார்.

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் 16-ஆவது பட்டமளிப்பு விழா வேலூர் மாவட்டம் சேர்க்காடுயில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தலைமை வகித்தார். பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ். தாமரைச்செல்வி வரவேற்று, ஆண்டறிக்கை வாசித்தார்.




விழாவில், மாணவிக்கு பட்டத்தை வழங்கிய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த். உடன், தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், திருவள்ளுவர் பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.தாமரைச்செல்வி உள்ளிட்டோர்.

விழாவில், குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிப் பேசியது:

மனிதகுலம் முழுமைக்கும் நன்மை பயக்கும் அமரத்துவம் வாய்ந்த அறக்கருத்துகளை வழங்கி, துறவு வாழ்க்கை மேற்கொண்ட பெரும் புலவர்களில் ஒருவர் திருவள்ளுவர். அனைவாது கல்வி, வாழ்க்கையில் ஒன்றிணைந்த பகுதியாக விளங்கும் அவரது உன்னதமான அறவுரைகளை உள்வாங்கிக் கொள்ள அனைவரும் உறுதியேற்க வேண்டும்.

இலக்கியத்தில் தனித்துவம் பெற்று விளங்கும் தமிழகத்தின் பெரும் பாரம்பரியத்துடன் எனக்கு தொடர்புள்ளதை உணர்கிறேன். வேளாண்மையில் உலகத்தைப் போல முற்கால பொறியியல் அற்புதங்களில் ஒன்று கல்லணை. இது உலகின் சிறந்த பாசன முறைக்கு உதாரணமாக பழமையான அணைகளில் ஒன்றாகவும் திகழ்கிறது.

தஞ்சையில் காவிரி ஆற்றின் குறுக்கே சோழர் காலத்தில் கட்டப்பட்ட அந்த அணை, நாட்டின் பன்னெடுங்கால சமுதாயத்தினரின் பொறியியல் திறமைக்குச் சான்றாகும். அறிவும், அறிவியல் உணர்வும் தமிழ் மக்களின் உள்ளார்ந்த பண்பாகத் தோன்றுகிறது.

இக்காரணத்தாலேயே கணித மேதை எஸ்.ராமானுஜன், நோபல் பரிசு பெற்ற சி.வி.ராமன், எஸ்.சந்திரசேகர் போன்றோர் பெரும் புகழ் பெற்றனர். தவிர, இந்தியாவின் ஒரே கவர்னர் ஜெனரல் சி.ராஜகோபாலாச்சாரி, முன்னாள் குடியரசுத் தலைவர்கள் ஆர்.வெங்கட்ராமன், ஏ.பி.ஜே.அப்துல் கலாம் ஆகியோரும் இந்த மண்ணின் மைந்தர்கள் எனக் கூறுவது பெருமைக்குரியதாகும்.

அறிவுடையோர் மட்டுமே முகத்தில் இரு கண்களைக் கொண்டுள்ளனர். மற்றவர்களுக்கு அவை இரண்டும் புண்களே என்பது குறள் விளக்கமாகும். கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்கும் கல்வி நிறுவனமாக திருவள்ளுவர் பல்கலைக்கழகம் விளங்குகிறது. இதில், சமுதாயத்தில் சவால்களைச் சந்தித்து வரும் பிரிவுகளைச் சேர்ந்த பெண்களும் அடக்கம்.

பெண்கள் அனைத்துத் துறைகளிலும் தடைகளைத் தகர்த்து வருகின்றனர். இது நாட்டின் பிரகாசமான வருங்காலத்தை பிரதிபலிக்கிறது. நாட்டின் பெண்கள் கல்வி பெறும்போது அவர்களது வருங்காலம் மட்டுமின்றி, நாட்டின் வருங்காலமும் பாதுகாக்கப்படுகிறது. கிராமப்புற ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் தொண்டாற்றும் அளவுக்கு விரிவடைந்துள்ள நாட்டின் உயர்கல்வி முறை உலகின் மூன்றாவது பெரிய கல்வி முறையாகவும் மாறியுள்ளது. எனினும், உயரிய இடங்களைத் தொடுவதற்கு இழந்த காலத்தை மீண்டும் மீட்டெடுக்க வேண்டியுள்ளது.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பே இந்தியாவில் செழுமையான கல்வி முறை இருந்தது. இதை காந்தியடிகள் அழகிய மரம் எனக் குறிப்பிட்டார். அதை சீர்திருத்தம் என்ற பெயரில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் வெட்டி வீழ்த்தினர். அந்தக் கடுமையான மாற்றங்களால் ஏற்பட்ட நிலையிலிருந்து முழுமையாக விடுபட்ட போதும், இன்னும் பாரம்பரியத்தை மீட்க முடியவில்லை.

அதற்கு தேசிய கல்விக் கொள்கை-2020 இந்தத் திசையில் பயணிக்க திட்டமிடப்பட்டு எடுக்கப்பட்ட உறுதியான முடிவாகும்.

சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதே வேளையில், குழந்தைகளும், இளைஞர்களும் தங்களது தனி வளர்ச்சியின் ஒரு பகுதியாக கல்வியைக் கற்றுக் கொள்ளும் வகையில் மாற்றத்துக்கான முழுமையான நோக்கத்தையும் இந்த புதிய கல்விக் கொள்கை கொண்டுள்ளது.

பழமையான பாரம்பரியம், நவீன கற்றல் ஆகியவற்றில் சிறந்தவற்றை ஒருங்கிணைத்துக் கொண்டுவரக் கூடிய இக்கல்விக் கொள்கை தார்மிக கல்வி, இந்தியக் கலாசாரம் குறித்த விழிப்புணர்வை வலியுறுத்துவதாக அமையும். இக்கல்வி முறையிலிருந்து வெளி வரும் மாணவர், அதிக தன்னம்பிக்கை, எதிர்காலத்தில் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் தகுதியை உடையவராகவும் இருப்பர்.

முன்னேற்றமான, தன்னிறைவு கொண்ட நாட்டுக்குமிகவும் அவசியமானவற்றை புதிய கல்விக் கொள்கை கருத்தில் கொண்டுள்ளது. உயர் கல்வி நிறுவனங்கள், அறிவு விரிவாக்கம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை நோக்கி நாட்டுக்கு வழிகாட்ட வேண்டும் என்று சர் சி.வி.ராமன் குறிப்பிட்டுள்ளார். இதுதான் புதிய கல்விக் கொள்கையின் மதிப்புமிக்க உந்துதலாகும் என்றார் அவர்.

விழாவில், நேரில் அனுமதிக்கப்பட்ட 217 பேருக்கு முனைவர் பட்டமும், 35 பேருக்கு இளங்கலை, 31 பேருக்கு முதுகலைப் பட்டமும் வழங்கப்பட்டன. தொடர்ந்து, இவர்களுடன் 78 பேருக்கு முதுநிலை பட்டயப்படிப்பு, 7 பேருக்கு பட்டயப்படிப்பு, 68,054 பேருக்கு இளங்கலை, 10,434 பேருக்கு முதுகலை, 1,320 பேருக்கு இளம் முனைவர் பட்டம் என மொத்தம் 80,176 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விழாவில், வேலூர் மாவட்ட ஆட்சியர் அ.சண்முகசுந்தரம், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ. பார்த்திபன், பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) க.சயதுசபி, தேர்வுக் கட்டுப்பாட்டாளர் (பொறுப்பு) இரா.விஜயராகவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினத்தந்தி

9-3-2021


மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் ஓட்டுப்போடுவது குறித்து கலெக்டர் சந்தீப்நந்தூரி விளக்கியபோது எடுத்த படம்.

# மாணவிகள் ஓட்டுப்போடாமல் இருக்கக்கூடாது

## கல்லூரி விழாவில் கலெக்டர் பேச்சு

மாலை முரசு

10-03-2021



வந்தவாசி நகராட்சி மற்றும் வருவாய்த்துறை சார்பில் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வாக்காளர் விழிப்புணர்வுப் பேரணி நடந்தது.

தினமலர்

வியாழன் மார்ச் 11, 2021



வேலூர் மாவட்டம் சேர்க்காடு பகுதியில் உள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் நடந்த 16வது பட்டமளிப்பு விழாவில், மாணவி ஒருவருக்கு ஜனாதிபதி ராம்நாத்கோவிந்த் பட்டம் வழங்கினார். அருகில் கவர்னர் பன்வாரிலால் புரோகித், துணைவேந்தர் தாமரைச்செல்வி.

# அறிவும், அறிவியல் உணர்வும் தமிழ் மக்களின் உள்ளார்ந்த பண்பு

## வேலூரில் ஜனாதிபதி பெருமிதம்

ராணிப்பேட்டை, மார்ச் 11–

திருவள்ளுவர் பல்கலைக் கழக 16வது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடந்தது. மாணவர்களுக்கு பட்டம் வழங்கி ஜனாதிபதி ராம் நாத்கோவிந்த் பேசியது:

இந்த பல்கலைக்கழகம் பெரும் புலவர்களில் ஒருவரான திருவள்ளுவர் பெயரை தாங்கியுள்ளது. அவருக்கு நாம் தலை வணங்குவோம். அவரின் உன்னதமான அறிவுரைகளை உள்வாங்கிக்கொள்ள உறுதி எடுத்துக்கொள்ளுவோம். குறட்பாக்கள் கல்வி மற்றும் வாழ்க்கையில் ஒன்றிணைந்த பகுதிகள். 1806ல் நடந்த வேலூர் சிப்பாய் புரட்சி நமது விடுதலை போராட்டத்துக்கு வித்திட்ட நிகழ்வுகளில் ஒன்று. உலகின் சிறந்த பாசன முறைக்கு உதாரணமாக பழமையான அணைகளில் ஒன்றாக கல்லணை திகழ்கிறது.

தஞ்சையில் காவிரி ஆற்றின் குறுக்கே சோழர்களின் காலத்தில் கட்டப்பட்ட கல்லணை நமது பண்டைக்கால சமூதாயத்தினரின் பொறியியல் திறமைக்கு சான்றாக திகழ்கிறது. அறிவும், அறிவியல் உணர்வும் தமிழ் மக்களின் உள்ளார்ந்த பண்பாக தோன்றுகிறது. கணித மேதை ராமானுஜர், நோபல் பரிசு பெற்ற சி.வி.ராமன், எஸ்.சந்திரசேகர் போன்றோர் இந்த காரத்தால் பெரும் புகழ் பெற்றனர்.

இந்தியாவின் ஒரே கவர்னர் ஜெனரல்ராஜகோபாலாச்சாரி, எனக்கு முன்னால் பதவி வகித்த ஆர்.வெங்கட்ராமன், டாக்டர் அப்துல்கலாம் ஆகிய இரண்டு ஜனாதிபதிகள் இந்த மண்ணின் மைந்தர்கள்.

நிறுவப்பட்டு, 20 ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம், நாட்டின் பெருமைமிகு பல்கலைக்கழகங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. மாணவர்களில் 65 சதவீதம் பேர் பெண்கள் என்பது மகிழ்ச்சி தருகிறது. சிறந்த கல்வி திறனுக்காக தங்கப்பதக்கம் பெற்ற 66 மாணவர்களில் 55 பேர் மாணவிகள் என்பதும், ஆராய்ச்சி பட்டம் பெற்ற 217 பேரில் 100 பேர் பெண்கள் என்பதும் பெருமைக்குரியது.

பெண்கள் கல்வி பெரும்போது அவர்கள் வருங்காலமும், நாட்டின் எதிர்காலமும் பாதுகாக்கப்படுகிறது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பேசெழுமையான கல்வி முறை இருந்தது. இதை காந்தியடிகள் 'அழகிய மரம்' என்று குறிப்பிட்டார். பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் சீர்திருத்தம் என்ற பெயரால் வெட்டித் தள்ளினர். நமது பாரம்பரியத்தை மீட்க புதிய கல்விக்கொள்கை உதவும். இந்தியாவின் சகாப்தத்தில் புதிய அத்தியாயத்தை எழுதும் திறமை உங்கள் ஒவ்வொரிடமும் உள்ளது. தாய் நாட்டின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் பட்டம் பெற்ற மாணவர்களின் பங்களிப்பு அவசியம் தேவை.

இவ்வாறு ஜனாதிபதி பேசினார்.

விழாவில் கவர்னர் பன்வாரிலால் புரோகித், துணைவேந்தர் தாமரைச் செல்வி, பதிவாளர் சையத்சபி, தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் விஜயராகவன், துணைப்பதிவாளர்கள் ரமேஷ், பிரதீப்ராஜ், தில்லைக்கண்ணு, பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### அபாய சங்கால் பரபரப்பு

ஜனாதிபதி உரையாற்றிக் கொண்டிருந்தபோது மேடைக்கு மிக அருகில் நிறுத்தி வைத்திருந்த ஜனாதிபதியின் பாதுகாப்பு படையினரின் கார் ஒன்றில் இருந்து அபாய ஒலி விட்டு விட்டு ஒலித்ததால் சலசலப்பு ஏற்பட்டது. உடனே பாதுகாப்பு பணியில் இருந்தவர்கள், ஓடிச்சென்று பார்த்தனர். சில விநாடிகளுக்கு பிறகு சைரன் சத்தம் நிறுத்தப்பட்டது.

இந்து தமிழ் திசை

ஞாயிறு, மார்ச் 14, 2021

அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# தேசிய அறிவியல் தினம்


திருவண்ணாமலை

தேசிய கதிரியக்க பாதுகாப்பு அமைப்பு, இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி நிலையம் மற்றும் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில் தேசிய அறிவியல் தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.

இயற்பியல் துறை தலைவர் செல்வகுமார் வரவேற்றார். கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் முன்னிலை வகித்தார். முதல்வர் முனைவர் மைதிலி வாழ்த்துரை வழங்கினார். இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி நிலைய இணை இயக்குநர் ஆத்ம லிங்கம், ராம்ஸ் தலைவர் மேனகா ஆகியோர் சிறப்புரையாற்றினர். எக்ஸ் கதிர், அணுஉலை மாதிரிகள் மற்றும் கதிரியக்கம் குறித்த கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது. மாணவர்கள் திரளாக கலந்து கொண்டு பயனடைந்தனர்.

விநாடி -வினா போட்டி, பேச்சு போட்டி, ஓவியப் போட்டி, ஸ்லோகன் உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதில், கல்லூரி செயலாளர் ரமணன், அறிவியல் சங்க தலைவர் கோபால் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இறுதியில், இயற்பியல் துறை பேராசிரியர் குமரன் நன்றி கூறினார்.




வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த தேசிய அறிவியல் தின விழாவில் சிறப்பு விருந்தினருக்கு பரிசு வழங்கிய கல்லூரி நிறுவனர் முனிரத்தினம். அருகில், முதல்வர் முனைவர் மைதிலி உள்ளிட்டோர்.

மாலை முரசு 10-03-2021



சேலூரில உள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் 16வது பட்டமளிப்பு விழா இன்று காலை பல்கலைக்கழக வளாகத்தில் நடந்தது. விழாவிற்கு மாவட்ட ஆட்சி தலைவர் சண்முகசுந்தரம் தலைமை தாங்கினார். விழாவில் கலந்து கொண்டு குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் பட்டங்களை வழங்கிய போது எடுத்த படம். அருகில் கவர்னர் பன்வாரி லால் புரோகித், துணைவேந்தர் தாமரைச் செல்வி ஆகியோர் உள்ளனர்.

## திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின்

# 16– வது பட்டமளிப்பு விழா!

## குடியரசு தலைவர், ஆளுநர் பங்கேற்பு!!

வேலூர், மார்ச். 10–

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் 16 வது பட்டமளிப்பு விழாவில் ஆளுநர் பன்வாரிலால் புரோகித், குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஆளுநர் பன்வாரிலால் புரோகித், குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் ஆகியோர் டெல்லியில் இருந்து விமானம் மூலம் சென்னை வந்தனர்.

அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் வேலூர் அரியூரில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிகாப்டர் இறக்கும் இடத்திற்கு காலை 10 மணிக்கு வந்தனர். அங்கு அவர்களை கலெக்டர் சண்முகசுந்தரம், எஸ்பி செல்வகுமார் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். அதன் பின்னர் அங்கிருந்து திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு காலை 10.30 மணிக்கு சென்றனர். சேலூரில் உள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் 16வது பட்டமளிப்பு விழா திருவள்ளுவர் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் சண்முகசுந்தரம் தலைமை தாங்கினார். அனைவரையும் திருவள்ளுவர் பல்கலைக்கழக துணை வேந்தர் தாமரைச் செல்வி வரவேற்றார்.

சிறப்பு விருந்தினர்களாக இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், தமிழக ஆளுநர், திருவள்ளுவர் பல்கலைக்கழக வேந்தர் பன்வாரிலால் புரோகித் ஆகியோர் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் நேரில் அனுமதிக்கப்பட்ட 217 முனைவர்பட்டம்பெறவுள்ளவர்களுக்கும், 35 இளங்கலை மற்றும் 31 முதுகலை பாடப்பிரிவுகளில் முதல் மதிப்பெண்பெற்றமாணவர்களுக்கும் பரிசுகளுடன்

5–ம் பக்கம் பார்க்க

# கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம்




வேலைவாய்ப்பு முகாமில் மாணவிக்கு பணி நியமன ஆணையை வழங்கிய கல்லூரியின் செயலர் எம்.ரமணன்.

வந்தவாசி, மார்ச் 20: வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில், சென்னையில் இயங்கும் சிம்கோ எச்ஆர் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தனியார் நிறுவனம் சார்பில் நேர்காணல் நடைபெற்றது. முகாமுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி முன்னிலை வகித்தார்.

முகாமில், அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் ஏற்கெனவே பயின்று பட்டம் பெற்றுச் சென்ற மாணவிகள் பங்கேற்றனர். அந்த நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டு அதிகாரி எம்.திலகவதி நேர்காணலை நடத்தினார். தேர்வு பெற்ற 30 மாணவிகளுக்கு பணி நியமன ஆணையை கல்லூரிச் செயலர் எம்.ரமணன் வழங்கினார். கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா, வேலைவாய்ப்பு ஒருங்கிணைப்பாளர் கே.வான்மதிசெல்வி உள்ளிட்டோர் பங்கேற்றனர். கல்லூரியின் வேதியியல் துறைத் தலைவர் எ.ஷோபா நன்றி கூறினார்.

தினமணி

ஞாயிற்றுக்கிழமை, 14 மார்ச் 2021

# கல்லூரியில் அறிவியல் தின விழா



கல்லூரியில் நடைபெற்ற அறிவியல் தின விழா கண்காட்சியைப் பார்வையிடும் சிறப்பு விருந்தினர்கள்.

**வந்தவாசி, மார்ச் 13:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தேசிய அறிவியல் தின விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கல்பாக்கம் இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி நிலையம், தேசிய கதிரியக்க பாதுகாப்பு அமைப்பு, அகிலாண்டேஸ்வரி கல்லூரி ஆகியவை சார்பில் நடைபெற்ற இந்த விழாவுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார்.

கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி, செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இயற்பியல் துறைத் தலைவர் எஸ்.செல்வகுமார் வரவேற்றார். கல்பாக்கம் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி நிலைய இணை இயக்குநர் எஸ்.ஆத்மலிங்கம், அணு ஆராய்ச்சி நிலைய அறிவியல் அலுவலர் எம்.மேனகா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதையொட்டி, அணு உலை மாதிரிகள் மற்றும் கதிரியக்கம் உள்ளிட்டவை குறித்த அறிவியல் கண்காட்சி நடைபெற்றது.

மாணவிகள் கண்காட்சியை பார்வையிட்டனர். அறிவியல் குறித்த வினாடி வினா, பேச்சுப் போட்டி உள்ளிட்டவற்றில் பங்கேற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இயற்பியல் துறைப் பேராசிரியர் சி.குமரன் நன்றி கூறினார்.

தினகரன்
29.10.2021

# கழிவறைகள் பயன்படுத்தாததால் 10 லட்சம் குழந்தைகள் இறப்பு

## கள விளம்பர துறை மண்டல இயக்குனர் பேச்சு



▶ வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் கள விளம்பர துறை சார்பில் நடந்த விழாவில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிக்கு சென்னை மண்டல இயக்குனர் காமராஜ் பரிசு, சான்றிதழ் வழங்கினார். உடன் தாசில்தார் முருகானந்தம், கல்லூரி செயலாளர் எம்.ரமணன்.

வந்தவாசி, அக்.29: வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மற்றும் வேலூர் கள விளம்பர பிரிவு, இணைந்து கொரோனா நோய் தடுப்பு, தூய்மை இந்தியா இயக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு தினம் குறித்த விழிப்புணர்வு முகாம் நேற்று கல்லூரி வளாகத்தில் நடந்தது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் ருக்மணி தலைமை தாங்கினார். தாசில்தார் முருகானந்தம், வட்டார மருத்துவ அலுவலர் ஆனந்த், கள விளம்பர அலுவலக உதவி அலுவலர் ஜெயகணேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி செயலாளர் எம்.ரமணன் வரவேற்றார்.

இதில் கள விளம்பர துறை சென்னை மண்டல இயக்குனர் காமராஜ் கலந்து கொண்டு பேசியதாவது: தனிநபர் கழிவறைகள் பயன்படுத்தாமல் உள்ளதால், குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகரித்து வருகிறது. அதில் 5 வயதிற்கு உட்பட்ட 10 லட்சம் குழந்தைகள் இறந்துள்ளனர். மேலும், திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை ஒழிக்க வேண்டும். கல்லூரி மாணவிகள் கிராமந்தோறும் சென்று கழிப்பறைகள் பயன்படுத்த கிராம மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக 75வது சுதந்திர தின கொண்டாட்டம் குறித்து ஓவியம், கட்டுரை, பேச்சு உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி மாணவிகளுக்கு பரிசு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. முடிவில் கல்லூரி பேராசிரியை கலைவாணி நன்றி கூறினார்.

TIRUPATI
வெள்ளி, அக்டோபர் 29, 2021
இந்து தமிழ் திசை

## வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கல்லூரியில்

# கரோனா தொற்று தடுப்பு விழிப்புணர்வு முகாம்

■ திருவண்ணாமலை

வேலூர் மக்கள் தொடர்பு கள அலுவலகம், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில் கரோனா தொற்று தடுப்பு, 75-வது சுதந்திர ஆண்டு விழா கொண்டாட்டம், ஒரே பாரதம் உன்னத பாரதம், தூய்மை இந்தியா இயக்கம், தேசிய ஒற்றுமை தினம் குறித்த விழிப்புணர்வு முகாம் வந்தவாசியில் நடைபெற்றது.

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் நடைபெற்ற முகாமுக்கு கல்லூரி முதல்வர் ருக்மணி தலைமை வகித்தார். செயலாளர் ரமணன் முன்னிலை வகித்தார். மக்கள் தொடர்பு கள விளம்பர சென்னை மண்டல இயக்குநர் காமராஜ் தொடங்கி வைத்து, ஓவிய போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பாராட்டு சான்றுகள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

அப்போது அவர் பேசும்போது, "திறந்தவெளியில் மலம் கழிப்பதை தவிர்த்து, தனி நபர் கழிப்பறையை பயன்படுத்த வேண்டும். சுகாதாரமாக வாழ்ந்தால் உயிரிழப்புகளை தவிர்க்கலாம்" என்றார்.

இதில் வந்தவாசி வட்டாட்சியர் முருகானந்தம், வட்டார மருத்துவ அலுவலர் ஆனந்த், வேலூர் மக்கள் தொடர்பு கள விளம்பர அலுவலக உதவி அலுவலர் ஜெயகணேஷ், பேராசிரியர் [illegible]ாணி, நூலகர் கலாராணி உட்பட பலர் கலந்துகொண்டனர். பின்னர் அனைவருக்கும் துணிப்பை வழங்கப்பட்டது.



▶▶ வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் கரோனா தொற்று தடுப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

செவ்வாய்க்கிழமை, 30 நவம்பர் 2021

தினமணி

# சிலம்பம் போட்டி பரிசளிப்பு விழா



சிலம்பம் போட்டியில் வெற்றி பெற்றவருக்கு பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் வழங்கிய ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம்.

**வந்தவாசி, நவ. 29:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான சிலம்பம் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு சிலம்பாட்டக் கழகம் சார்பில், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டிக்கு சிலம்பாட்ட கழக மாவட்டத் தலைவர் மு.முருகேஷ் தலைமை வகித்தார். செயலர் பெ.பெரியசாமி வரவேற்றார். போட்டிகளில் வந்தவாசி, ஆரணி, பெரணமல்லூர், சேத்துப்பட்டு, திருவண்ணாமலை ஆகிய ஊர்களிலிருந்து சிலம்பாட்ட வீரர்கள் பங்கேற்றனர்.

நடுவர்களாக ஆறுமுகம், மின்னிலா, ராணி, சேட்டு, காளிதாஸ் ஆகியோர் செயல்பட்டனர். இளையோர் ஆண்கள் பிரிவில் சேத்துப்பட்டு புத்தாஸ் சிலம்பக் குழுவின் சேதுராமன், பெண்கள் பிரிவில் திருவண்ணாமலை சிலம்பக் குழுவின் தர்ஷினி ஆகியோர் முதலிடத்தைப் பெற்றனர். மேலும், மூத்தோர் ஆண்கள் பிரிவில் பெரணமல்லூரைச் சேர்ந்த இளவரசன், பெண்கள் பிரிவில் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவி ஆர்.லெட்சுமி ஆகியோர் முதலிடத்தைப் பெற்றனர். பின்னர் கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், டிஎஸ்பி விஸ்வேஸ்வரய்யா ஆகியோர் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கம், சான்றிதழ்களை வழங்கினர்.

வந்தவாசி ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளி நிர்வாக இயக்குநர் சி.வி.ரங்கநாதன், வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்கச் செயலர் பா.சீனிவாசன் ஆகியோர் வெற்றி பெற்றவர்களை பாராட்டிப் பேசினர். இதில் வெற்றி பெற்றவர்கள் வருகிற டிச. 18-ஆம் தேதிசிவகங்கையில் நடைபெறும் மாநில அளவிலான போட்டியில் பங்குபெற உள்ளனர்.

மணிச்சுடர் அக்டோபர் 29-2021



திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 29.10.2021 வெள்ளிக்கிழமையன்று இந்திய தகவல் அமைச்சகம் சார்பில் தேசிய ஒற்றுமை தினம் கடைபிடிக்கப்பட்டது. கல்லூரி செயலாளர் மு. ரமணன் தலைமை வகித்தார். வந்தவாசி வட்டாட்சியர் முருகானந்தம் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு புதுச்சேரி தகவல் ஒளிபரப்பு மண்டல இயக்குநர் காமராஜ் பங்கேற்று பேசினார். மேலும் மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. கல்லூரி முதல்வர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

TIRUPATI
செவ்வாய், நவம்பர் 30, 2021

இந்து தமிழ் திசை

# சிலம்பாட்ட போட்டியில் வென்றவர்களுக்கு பரிசு

திருவண்ணாமலை

தி.மலை மாவட்ட சிலம்பாட்டக் கழகத்தின் மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கமும் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி வந்தவாசியில் நடைபெற்றது.

மாவட்ட சிலம்பாட்ட கழகத் தலைவர் கவிஞர் மு.முருகேஷ் தலைமை வகித்தார்.

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியின் தாளாளர் பா.முனிரத்தினம் முன்னிலை வகித்தார். மாவட்டச் செயலாளர் பெ.பெரியசாமி வரவேற்புரை யாற்றினார். வந்தவாசி, ஆரணி, பெரணமல்லூர், திருவண்ணா மலை, சேத்துப்பட்டு ஆகிய பகுதிகளிலிருந்து சிலம்பாட்ட வீரர்கள், மாவட்ட அளவிலான போட்டியில் பங்கேற்றனர். நடுவர்களாக ஈரோடு மாவட்ட சிலம்பாட்ட கழக தேசிய நடுவர் ஆறுமுகம் தலைமையிலான குழுவினர் செயல்பட்டனர்.

சப்-ஜூனியர் ஆண்கள் பிரிவில் சேத்துப்பட்டு புத்தாஸ் சிலம்பக் குழு சேதுராமன், பெண்கள் பிரிவில் திருவண்ணா மலை சிலம்பக் குழு தர்ஷினி, ஆண்களுக்கான சீனியர் பிரிவில் பெரணமல்லூர் இளவரசன், பெண்களுக்கான சீனியர் பிரிவில் வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவி லட்சுமி ஆகியோர் முதலிடம் பிடித்தனர்.

போட்டிகளில் வென்றவர் களுக்கு காவல் துணை கண் காணிப்பாளர் கா.விஸ்வேஸ் வரய்யா, பதக்கம் மற்றும் சான்றிதழ் களை வழங்கி சிறப்புரையாற் றினார். ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளியின் நிர்வாக இயக்குநர் ரங்கநாதன், வந்தவாசி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி உடற்கல்வி ஆசிரியர் முத்தமிழன், வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்க செயலாளர் பா.சீனிவாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாவட்ட அளவிலான போட்டி களில் வெற்றிபெற்ற சிலம்பாட்ட வீரர்கள், சிவகங்கையில் டிசம்பர் 18, 19 ஆகிய தேதிகளில் நடை பெறவுள்ள மாநில அளவிலான சிலம்பாட்ட போட்டிகளில் பங் கேற்க உள்ளனர்.

இந்து தமிழ் திசை

TIRUPATI

வியாழன், டிசம்பர் 23, 2021

# வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் கருத்தரங்கம்

■ திருவண்ணாமலை

தி.மலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் ஐசிடி அகாடமி சார்பில் புதிய திறன் மேம்பாட்டு கருத்தரங்கம் நடைபெற்றது.

முதல்வர் முனைவர் ருக்மணி தலைமை வகித்தார். நிறுவனர் முனிரத்தினம், செயலாளர் ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தார். ஐசிடி அகாடமி ஒருங்கிணைப்பாளர் முனைவர் வான்மதிசெல்வி வரவேற்றார். அகாடமி தலைவர் அன்புதம்பி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசும்போது," நம்முடைய வாழ்க்கையை தடைகள் முடக்கி விடக்கூடாது. தடைகளை தகர்த்து முன்னேற வேண்டும்" என்றார். பின்னர், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. இணையவழி கற்றலை முடித்த மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. முடிவில், கணினி அறிவியல் துறைத் தலைவர் முனைவர் தமிழரசி நன்றி கூறினார்.




▶▶ திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் ஐசிடி அகாடமி சார்பில் புதிய திறன் மேம்பாட்டு கருத்தரங்கம் நடைபெற்றது.

தினகரன்

23.12.2021

## வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் கருத்தரங்கம்

# தடைகளை தகர்த்து முன்னேற வேண்டும்

## சென்னை அகடாமி தலைவர் பேச்சு




▶ வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் சென்னை ஐசிடி அகடாமி தலைவர் பி.அன்புத்தம்பி இணையவழி கற்றல் மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். உடன் கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம், கல்லூரி முதல்வர் சி.ருக்குமணி.

வந்தவாசி,டிச.23: வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கருத்தரங்கில், 'தடைகளை நாம் தகர்த்து முன்னேற வேண்டும்' என சென்னை அகடாமி தலைவர் அன்புத்தம்பி பேசினார்.

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சென்னை ஐசிடி அகடாமி இணைந்து அனைத்து துறைகளுக்கான புதிய திறன் மேம்பாட்டு கருத்தரங்கு நேற்று கல்லூரி வளாகத்தில் நடந்தது. கருத்தரங்குக்கு கல்லூரி முதல்வர் சி.ருக்குமணி தலைமை தாங்கினார்.

கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம், செயலாளர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி ஒருங்கிணைப்பாளர் கே.வான்மதி செல்வி வரவேற்றார். இதில் சென்னை ஐசிடி அகடமி தலைவர் பி.அன்புத்தம்பி கலந்துகொண்டு கொரோனா தொற்றுக்கு பிறகு நுண்ணறிவு திறன்களை மாணவிகள் எவ்வாறு வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பது குறித்து பேசியதாவது:

தடைகள் நம்முடைய வாழ்க்கையை முடக்கி விடக்கூடாது. தடைகளை நாம் தகர்த்து முன்னேற வேண்டும். வாழ்க்கையில் முதல் பருவம் பள்ளி, இரண்டாவது கல்லூரி பருவம், இதனை தொடர்ந்து அடுத்து வரும் பருவம் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் வாழ்க்கையை நினைக்கும் பருவமாகும். நீங்கள் அனைவரும் அடுத்த பருவத்திற்கு செல்ல தயாராக உள்ளீர்கள். அதற்கு நீங்கள் உங்களை தயார் படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு அடிக்கல் படிப்புதான்... படிப்பு ஒன்றே அனைத்துநிலைகளையும் சமாளிக்கும் திறன் கொண்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக இணையவழி கற்றல் மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். முடிவில் கணினி அறிவியல் துறை தலைவர் கே.தமிழரசி நன்றி கூறினார்.